இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 07-02-2025

# நிதிக்குழுவால் என்ன பயன்?

**“ஒன்றிய அரசு பகிர்ந்தளிக்கும் வரியில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதை 16 ஆவது நிதிக்குழுவிடம் மாநிலங்கள் பதிவு செய்யலாம்” என்று அருள் பாலித்திருக்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.**

**“மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் வரி வருவாய் கணக்கீடுகளை ஒன்றிய அரசு முடிவு செய்வதில்லை. இவை நிதிக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையிலே முடிவு செய்யப்படுகின்றன” என்றும் நிர்மலா சீதாராமன் சொல்லி இருக்கிறார். இது எல்லாம் நம்பும் படியாக இருக்கிறதா?**

**“வரிப் பகிர்வு சதவீதத்தை மாற்றியமைக்கக் கோரும் தென் மாநிலங்கள் நிதிக்குழுவிடமே தங்கள் கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும்” என்று சொல்லி இருக்கிறார் நிதி அமைச்சர். எல்லாவற்றையும் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றால் இவருக்கு என்னதான் வேலை?**

மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு பகிர்ந்தளிக்கும் வரி வருவாயை 32 விழுக்காட்டில் இருந்து 42 விழுக்காடு ஆக்க 14ஆவது நிதிக்குழு பரிந்துரை செய்தது. இதனை 41 விழுக்காடாக 15 ஆவது நிதிக்குழு பரிந்துரைத்தது. இதனை 50 விழுக்காடு ஆக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16 ஆவது நிதிக்குழுவிடம் கோரிக்கை வைத்து இருந்தார்.

**“கடந்த 15-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய வரி வருவாய்ப் பங்கினை 41 விழுக்காடாக உயர்த்தினார்கள். ஆனால் இந்தப் பரிந்துரைக்கு மாறாக கடந்த 4 ஆண்டுகளில் ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் 33.16 விழுக்காடு மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் இணைந்து செயல்படுத்திடும் திட்டங்களுக்கான மாநில அரசின் பங்குத்தொகை தொடர்ந்து உயர்ந்து வருவதும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நிதி நிலையை மேலும் பாதிக்கின்றது. ஒருபுறம் ஒன்றிய அரசிடமிருந்து வர வேண்டிய வரிப் பகிர்வு குறைவதால் மாநில அரசுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள். மறுபுறம் ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு மாநில அரசு செலவிடும் அதிக நிதி என இரண்டுமே மாநில அரசுகளுக்குப் பெரும் சுமையை ஏற்படுத்துகின்றன. எனவே, ஒன்றிய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப் பகிர்வின் பங்கு 50 விழுக்காடு உயர்த்தப்படுவதுதான் முறையானதாக இருக்கும்**” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதனை 16 ஆவது நிதிக்குழு ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

**நிதிக்குழுவிடம் போய் உங்கள் குறைகளைச் சொல்லுங்கள் என்று சொல்லும் நிதி அமைச்சர், நிதிக்குழு சொன்ன 41 விழுக்காட்டை ஒழுங்காகக் கொடுத்தாரா? என்றால் இல்லை. மாநிலங்களுக்கு 33.16 விழுக்காடு நிதி தான் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. நிதிக்குழு உத்தரவிட்ட 41 விழுக்காட்டை வழங்காதது யார் குற்றம்? அதையும் நிதிக்குழுவிடம் போய் தான் கேட்க வேண்டுமா?**

“மாநில அரசின் பட்டியலில் இடம் பெற்றுள்ள இனங்களின் கீழ் நிறைவேற்றப்படும் நலத்திட்டங்களுக்கு 75 சதவீத பங்களிப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும். மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியினை 2026-27 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 50 சதவீதமாக உயர்த்தி, 90:10 என்ற அளவில் ஒன்றிய - மாநில நிதிப் பங்கீட்டில் வழங்க வேண்டும். பரிந்துரை காலத்தில் செயல்படுத்துவதற்கான நிதி அளவுகளில் ஆண்டுக்கு 5 சதவீதம் என்ற அளவிலிருந்து 10 சதவீதம் என்ற அளவில் உயர்த்தப்பட வேண்டும்.” - என்றெல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். அதற்கு 16 ஆவது நிதிக் குழுவின் நிலைப்பாடுகள் என்ன?

“சமச்சீரான வளர்ச்சியையும், திறமையான நிர்வாகத்தையும் இந்த வரிப் பகிர்வு முறையில் சமக்குறிகோள்களாகக் கருதி இந்த நிதிக் குழு தனது பரிந்துரைகளை வழங்கும் என்று நம்புகிறோம். நாட்டின் சமச்சீரான வளர்ச்சியை எதிர்நோக்கும் வகையில் வளர்ச்சி குன்றிய பகுதிகளுக்குத் தேவையான நிதியை வழங்குவது அவசியம் என்றாலும் அதே வேளையில், பல்வேறு வகையிலும் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பதன் மூலமாகவே அவற்றின் வளர்ச்சியைத் தக்கவைப்பதுடன் அந்த மாநிலங்களின் வளர்ச்சிப்பாதைக்கும் வழிவகுக்க முடியும், என்பதையும் நிதிக்குழு கவனத்தில் கொள்ள வேண்டும். சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதியைக் குறைத்து வளர்ச்சியை எதிர்நோக்கும் பகுதிகளுக்கு நிதி ஆதாரங்களை மடைமாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுவது மட்டுமின்றி, வளர்ச்சி குன்றிய மாநிலங்களுக்கு இறுதியாகக் கிடைக்கும் வரிப்பகிர்வும் குறைந்துவிடும் என்பதே உண்மை” என்று நிதிக்குழுவிடம் மாண்புமிகு முதலமைச்சர் சொன்னது அவர்களது இதயத்தை திறப்பதாக அமைந்திருந்தது.

தமிழ்நாடு முதலமைச்சரின் வாதங்களைக் கேட்ட 16ஆவது நிதிக்குழுவின் தலைவர் அரவிந்த் பனகாரியா, “தமிழ்நாடு அரசின் சார்பில் Masterclass Presentation செய்யப்பட்டிருக்கிறது” என்று பாராட்டினார். “இதுவரை 12 மாநிலங்களுக்குச் சென்றுள்ளோம். ஆனால் தமிழ்நாடு அரசு எங்களுக்கு அளித்த விளக்கம்தான் இதுவரை அளிக்கப்பட்ட விளக்கங்களில் மிகச் சிறந்தது” என்று அரவிந்த் பனகாரியா சொன்னார். நிருபர்கள் கூட்டத்தில் பாராட்டினார். ஆனால் அவரது அறிக்கையில் இதனைச் சேர்ப்பாரா எனத் தெரியவில்லை.

**குடியரசுத் தலைவரால் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழு அமைக்கப்படுகிறது. மொத்த வரி வருவாயை ஒன்றிய அரசும் மாநில அரசும் பகிர்ந்து கொள்வது தொடர்பாகவும், மாநிலங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒதுக்க வேண்டிய நிதி தொடர்பான பணிகளை நிதிக்குழு கவனித்து வருகிறது. இந்தக் குழு நாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று மாநிலங்களின் கருத்தைப் பெற்று அதனை அறிக்கையாக வழங்க வேண்டும். ஆனால் அதனை ஒன்றிய அரசு மதிப்பது இல்லை என்பது தான் கடந்த கால அனுபவம். அப்படியானால் நிதிக்குழுவால் என்ன பயன்?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.2.2025) தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான தி.வேல்முருகன் சந்தித்து, தங்களது நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 21 சமூக நீதி போராளிகளுக்கு மணி மண்டபம் அமைத்து கொடுத்தமைக்காக தனது நன்றியினை தெரிவித்துக்கொண்டார். இச்சந்திப்பின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநில துணை செயலாளர் வேணுகோபால் ஆகியோர் உடனிருந்தனர்.

# கீழடி அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் எப்போது வெளியிடப்படும்?

## மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, பிப்.7–**

**கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் எப்போது வெளியிடப்படும் என திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சர் பதிலளித்துள்ளார்.**

கனிமொழி கருணாநிதி அவர்கள் எழுப்பிய கேள்வி வருமாறு:

“தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டம் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட முதல் கட்ட, இரண்டாம் கட்ட அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் எப்போது வெளியிடப்படும்;

2014 மற்றும் 2016 க்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்கள் என்ன?

கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் ஒன்றிய அரசு மேற்கொண்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளின் விவரங்கள் மற்றும் அத்தகைய அகழ்வாராய்ச்சிகளின் அறிக்கைகள் வெளியிடப்பட்ட தேதி ஆகிய விவரங்கள் தேவை” என்று தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரான கனிமொழி கருணாநிதி எழுத்துபூர்வமாக கேள்விகள் கேட்டிருந்தார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில்,

“தொல் பொருட்களின் காலகட்டங்கள் மற்றும் பல்வேறு மிச்சங்களை கண்டுபிடிப்பதற்காக அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த அறிக்கைகளை உறுதிப்படுத்திட வெவ்வேறு ஆய்வகங்களில் விரிவான அறிவியல் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு தேவைப்படுகின்றன, இதற்கு பெரும்பாலும் நேரம் எடுக்கும்.

கீழடியில் 2014 முதல் 2016 வரை நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் குறித்த அறிக்கை 2023 இல் சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கையை வெளியிடுவதற்கு, நிபுணர்களால்



முழுமையான பரிசோதனையை உள்ளடக்கிய உரிய செயல்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் இந்திய தொல்பொருள் ஆய்வு (ASI) நிறுவனத்தின் பல்வேறு கள அலுவலகங்களால் 82 இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் 2015-16, 2016-17 களில் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், 2017-18 இல் ஈரோடு மாவட்டம் கொடுமணலிலும், 2021-22 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளில் தூத்துக்குடியில் உள்ள ஆதிச்சநல்லூரிலும், 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் வடக்கப்பட்டிலும், 2024-25 இல் செங்கல்பட்டு, கொடும்பலூர் ஆகிய இடங்களிலும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

சில அகழ்வாராய்ச்சிகள் விரிவான அளவில் மேற்கொள்ளப்படுவதால் அவை பல ஆண்டுகள் நீடிக்கும். அவற்றின் குறிப்பிட்ட பருவத்தின் பணிகள் முடிந்தவுடன் அவ்வப்போது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

சலுவன்குப்பம், சுபரேய், பர்சோஹோம், பைதான், கலிபங்கன், லலித்கிரி, தலேவன், ஆடம் மற்றும் ஹுலாஸ் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் குறித்த இறுதி அறிக்கைகள் விரிவான ஆய்வு மற்றும் அறிவியல் பகுப்பாய்வு முடிக்கப்பட்டு கடந்த பத்து ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

### சட்டப்படி மாநில அரசுக்கு ஆளுநர் கட்டுப்பட்டு செயல்பட வேண்டும் என

# பிரதமர் மோடி சொன்ன பிறகு ஆளுநர் ரவி என்ன சொல்லப் போகிறார்?

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கேள்வி!

சென்னை, பிப். 7-

மாநில அரசிற்கு கட்டுப்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டும் என்ற சட்டப்படியான உண்மையை பிரதமர் மோடியே ஒத்துக்கொள்கிறார். இனி என்ன சொல்லப் போகிறீர்கள் ஆளுநர் ரவி அவர்களே என சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி எக்ஸ் தள பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமைச்சர் எஸ்.ரகுபதியின் எக்ஸ்தள பதிவு வருமாறு:-

நாடாளுமன்றத்தில் அவை மரபுகளை பற்றி பேசி சிலாகிக்கும் மோடி அவர்களுக்கு பா.ஜ.க. ஆளாத மாநிலங்களின் சட்டமன்ற மரபுகளை ஆளுநர்கள் எவ்வாறு சிதைக்கின்றனர் என்பது தெரியாதா?



தமிழ்நாட்டில் மோடி நியமித்திருக்கும் ஆளுநர் ரவி அவர்களோ தமிழ்நாடு அரசின் உரையை வாசிப்பது கூட இல்லை!

ஆளுநரோடு முரண்பட்ட போதிலும் பேரவை நாகரிகம் கருதி முதலமைச்சர் அவர்கள் ஆளுநருக்கு மதிப்பளித்து சட்டப் பேரவையில் உரையாற்ற சபாநாயகர் மூலம் அழைப்பு விடுத்தார். ஆனால் நாகரிகம் என்றால் கிலோ எத்தனை ரூபாய் என கேட்கும் அளவு நடந்து கொள்ளும் ஆளுநர் ரவி பேரவை மாண்பை மதிக்காமல் உரையை படிக்காமல் உதாசீனப்படுத்தினார்.

சட்டப்படி மாநில அரசு தயாரித்து கொடுக்கும் உரையை தான் ஆளுநர் வாசிக்க வேண்டும் அதை தான் நாம் வலியுறுத்தினோம். மாநில அரசிற்கு கட்டுப்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டும் என்ற சட்டப்படியான உண்மையைபிரதமர் மோடியே ஒத்துக்கொள்கிறார். இனி என்ன சொல்லப் போகிறீர்கள் ஆளுநர் ரவி அவர்களே?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டுள்ளார்.

### மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில்

# தமிழ்நாடு ஆளுநர் எதன் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறார்?

## ஒன்றிய அரசு பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு!

*புதுடெல்லி, பிப்.7-*

*மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கும் விவகாரத்தில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி எதன் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறார் என்பதை ஒன்றிய அரசின் தலைமை வழக்கறிஞர் தெரிவிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இன்னும் 24 மணி நேரம் இருப்பதால் ஆளுநர் அரசியல் சாசனப்படி செயல்படும் வகையில் தமிழ்நாடு அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி முடிவெடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் ஆலோசனை வழங்கினர்.*

*சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் தாமதம் செய்வது, துணைவேந்தர் நியமனம் உள்ளிட்ட விவகாரங்களில் தன்னிச்சையாக செயல்படுவது உள்ளிட்ட ஆளுநர் ஆர். என்.ரவியின் செயல்பாடுகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் பல மனுக்களை தாக்கல் செய்துள்ளது. துணை வேந்தர் நியமனம் தொடர்பான வழக்கில் யு.ஜி.சி.,யையும் எதிர் மனுதாரராக சேர்த்து தமிழ்நாடு அரசு திருத்த மனு தாக்கல் செய்தது. தமிழ்நாடு அரசு தாக்கல் செய்ய மனுக்கள், உச்ச நீதிமன்றத்தில் அவசர வழக்காக நேற்று விசாரணைக்கு வந்தது.*

*தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்*



*கள் முகுல் ரோத்தகி, அபிஷேக் சிங்வி ஆகியோர் ஆஜராகினர். 2020 - 2023 இடையே 20 மசோதாக்களை ஆளுநர் நிலுவையில் வைத்திருந்ததாகவும், தற்போது வழக்கு தொடர்ந்த உடன் 10 மசோதாக்களை குடியரசு தலைவருக்கு அனுப்பியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மேலும், ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுத்த மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்கு அரசியல் சாசனப்படி ஆளுநர் ஒப்புதல் வழங்கி ஆக வேண்டும் என்றும் வாதிட்டனர். அரசியல் சாசனம் கால நிர்ணயம் செய்யவில்லை என்பதற்காக ஆளுநர் முடிவுகளை எடுக்காமல் இருக்க முடியாது எனத் தெரிவித்த தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர்கள், அரசியல் சாசன விதிகளை ஆளுநர் ஆர்.என்.ரவி முறையாக பின்பற்றாமல், அவருக்கு விருப்பமான வழியில் செயல்பட்டு வருவதாகவும் குற்றம்சாட்டினர். இதனைத் தொடர்ந்து ஆளுநர் சார்பில் அட்டர்னி ஜெனரல் வெங்கடரமணி ஆஜராகி வாதிட்டார். இருதரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், ஆளுநர் ஆர்.என்.ரவி எதன் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறார் என்பதை வியாழக்கிழமைக்குள் தெரிவிக்க வேண்டும் என அட்டர்னி ஜெனரலுக்கு உத்தரவிட்டனர். வியாழக்கிழமை முதல் வழக்காக இந்த வழக்கு விசாரிக்கப்படும் என்றும் நீதிபதிகள் அறிவித்தனர். மேலும், ஆளுநர் அரசியல் சாசனப்படி செயல்படும் வகையில் தமிழ்நாடு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவெடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் ஆலோசனை வழங்கினர்.*